# திருச்செந்தூர் ஷண்முக ஸ்தோத்திரம்

## Thiruchendur Shanmuga Stotram

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஸ்ரீதேவிபிரசாத்
psdprasad.music@gmail.com

PSDPRASAD

நவம்பர் - 2020

## ஸ்ரீ சுப்ரமண்யாயநம:

## திருச்செந்தூர் ஸ்ரீ ஷண்முக ஸ்தோத்திரம்

கீழ்காணும் தகவலை இணையத்தில் படித்தேன். இதை ஸ்ரீ ஆதி சங்கரர் எழுதியதாக சொல்லப்பட்டுள்ளது.


Adhi Shankara was affected by the evil chants of Abhinava Guptha, when he was staying in the temple of Thiruchendur (Holy city of sandal) which is in the sea shore. He composed the"Subramany Bhujanga stotra" as well as The “Shanmuga sthothram" and got rid of the evil effects of the chant.

அந்தளட்டு ஸ்லோகங்களும், அதற்கான பொருள், தமிழ் கவிதை நடையிலும் இந்நூலில் பதிவுசெய்கிறேன்.

சுப்ரமண்யாய நமஹ: ! வணக்கங்களுடன்....

பி.ஸ்ரீதேவிபிரசாத்

PSDPRASAD



(1)

Naradadhi deva yogi brunda hrud nikethanam,

Barhivaryavahamindu shekareshta nandanam,

Bhakthaloka roga dukha papa sanga banjanam,

Bhavayami sindhu theera vasinam, shadananam.

நாரதாதி யோகியரின்
உள்ளங்களில் உறைபவன் !
பாவம், பிணி துன்பங்களை
பக்தர்க்கெலாம் தீர்ப்பவன் !
பிறைநிலவை தலையில்சூடும்
பரமசிவன் புத்திரன் !
குறைகளைய மயிலிலேறி
உலகபவனி வருபவன் !
கரையினோரம் கோயில்கொண்ட
அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

(2)

Tharakari mindra mukhya deva brunda vanditham,

Chandra chandanadhi sheethalanga mathma bhavitham,

Yaksha sidha kinnaradhi mukhya divya poojitham,

Bhavayami sindhu theera vasinam, shadananam.

இந்திராதி தேவர்களும்

அடிபணிந்து தொழுகுவோன் !

சந்தனத்தை பூசுவதால்

சந்திரன்போல் குளிர்ந்தவன் !

யுத்தத்திலே அசுரனவன்

தாரகனை வென்றவன் !

சித்தர், யட்சர் கிண்ணரர்கள்

போற்றுகின்ற தலைமகன் !

கரையினோரம் கோயில்கொண்ட

அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

3)

Champakabhja malathee sumatdhi malya bhooshitham,
Divya shad kireeda hara kundaldhyalangrutham,
Kumkumadhi yuktha divya ganda bhanga lepitham,
Bhavayami sindhu theera vasinam, shadananam. 3

சம்பங்கியும் மல்லிகையும்

கோர்த்தமாலை தரித்தவன் !

குங்குமமும் சந்தனமும்

குழைத்துபூசும் மேனியன் !

குண்டலங்கள் பன்னிரெண்டு

செவிகளிலே பூண்டவன் !

மின்னுகின்ற மணிமகுடம்

சிரங்களாறில் கொண்டவன் !

கரையினோரம் கோயில்கொண்ட

அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

4)

Asrithakhileshta loka rakshanamarangripam,

Shakthipanimachyuthendra padma smbhavadhipam,

Sishtaloka chinthithatha sidhi dana lolupam,

Bhavayami sindhu theera vasinam, shadananam.

வாரணங்கள் எட்டுசூழ

தாரணியைக் காப்பவன் !

நாரணனும், இந்திரனும்

ப்ரம்மனுமே பணிபவன் !

சக்தியவள் தந்தவேலை

கரத்தினிலே கொண்டவன் !

பக்தர்களின் வேண்டுதலை

அருள்வதிலே வல்லவன்!

கரையினோரம் கோயில்கொண்ட

அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

5)

Veerabahu poorvakoti veerasangha soukyadam,
Soorapadma mukhya lakshakoti soora mukthidham,
Indra poorva devasangha sidha nithya soukhyadham,
Bhavayami sindhu theera vasinam, shadananam.

வீரபாகு படையதனில்
 வீரரோடு சேர்ந்தவன் !
சூரனுக்கும் அவன்படைக்கும்
 முக்தியினைத் தந்தவன் !
இந்த்ரனுக்கும் தேவருக்கும்
 சௌக்கியங்கள் செய்தவன் !
கரையினோரம் கோயில்கொண்ட
 அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

6)

Jamba vairo kaminee manoradhapi poorakam,

Kumbha sambhavaya sarva dharma sara dayakam,

Tham bhavabdhi bodamambhi geyamasu siddhitham,

Bhavayami sindhu theera vasinam, shadananam

கும்பத்திலே ஜனித்தவராம்

அகத்திய மாமுனிவருக்கு

தர்மசராம் என்னவென்ற

தத்துவத்தை சொன்னவன் !

ஜம்பைஎனும் அசுரன்பகை

முடித்துஅருளும் செய்தவன் !

என்னைஇந்த வாழ்க்கையெனும்

கடலில்கரை சேர்த்தவன் !

கரையினோரம் கோயில்கொண்ட

அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

7)

Poornachandra bimbakoti thulya vakthra pankajam,

Varnaneeya sacharithra mishasidhi dhayakam,

Swarnavarna gathramugra sidha loka sikshakam,

Bhavayami sindhu theera vasinam, shadananam

நூறுகோடி நிலவுபோல

ஒளிரும் கமலமுகத்தினன் !

பேரைச்சொல்லி பாடுவோர்க்கு

வேண்டும்வரம் தருபவன்!

மின்னுகின்ற பொன்நிறத்தோன்

வாட்டமான மேனியன் !

என்றுமந்த சித்தர்களின்

குலங்களதைக் காப்பவன் !

கரையினோரம் கோயில்கொண்ட

அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

8)

Poorva janam sanchithaga sanga bhanga thathparam,

Sarva dharma dhanakarma poorva punya sidhitham,

Sarva shathru sanga bhanga dakshamindra jaapatheem,

Bhavayami sindhu theera vasinam, shadananam

முற்பிறவி பாவங்களை

முற்றிலுமாய் அழிப்பவன் !

நற்செயலாம் புண்ணியத்தின்

நற்பலன்கள் தருபவன் !

கோபமோடு பகைமுடித்து

நாடியோரைக் காப்பவன் !

தேவலோக தலைமகனாம்

இந்திரனின் மருமகன் !

கரையினோரம் கோயில்கொண்ட

அறுமுகனே வந்தனம் !

PSDPRASAD

सुब्रह्मण्य करावलम्बं पुण्यं ये पठन्ति द्विजोत्तमाः । ते सर्वे मुक्ति मायान्ति सुब्रह्मण्य प्रसादतः ।

सुब्रह्मण्य करावलम्बमिदं प्रातरुत्थाय यः पठेत् । कोटिजन्मकृतं पापं तत्क्षणादेव नश्यति ॥

ஸுப்ரஹ்மண்ய கராவலம்பம் புண்யம் யே படந்தி த்விஜோத்தமா꞉ |
தே ஸர்வே முக்தி மாயாந்தி ஸுப்ரஹ்மண்ய ப்ரஸாதத꞉ |
ஸுப்ரஹ்மண்ய கராவலம்பமிதம் ப்ராதருத்தாய ய꞉ படேத் |
கோடிஜன்மக்றுதம் பாபம் தத்க்ஷணாதேவ னஶ்யதி ||

சுப்ரமண்யர் அஷ்டகம் இதனை படிப்பவரெ ல்லாம்..

முக்தியே அடைவார்... முருகனின் அருளால்..! நிச்சயமாக..

அனுதினம் காலை இதைப் படிப்பதனால்..

ஜென்மத்து பாவமும் நொடியினில் நீங்கும் !

***********

PSDPRASAD